பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

17 04 2024 **WEDNESDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மக்களவைக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 102 தொகுதிகளில் இன்று மாலையுடன் பிரச்சாரம் நிறைவு பெறுகிறது.

- அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

- தேர்தல் நடத்துவதற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாஹூ தெரிவித்துள்ளார்.

- ஐக்கிய அரபு அமிரகத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

- மெக்ஸிகோ சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Rithvik – Nikki Kalliayanda** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-----------

மக்களவைத் தேர்தலில் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 17 மாநிலங்கள் மற்றும் 4 யுனியன் பிரதேசங்களில் உள்ள 102 தொகுதிகளில் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

முதல்கட்ட வாக்குப்பதிவு வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனையடுத்து அரசியல் கட்சித் தலைவர்களும், வேட்பாளர்களும் இறுதிக்கட்ட வாக்குசேகரிப்பில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கடும் வெயிலையும் பொருட்படுத்தாது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், வேட்பாளர்களும் வீடு வீடாகச் சென்று இறுதிக்கட்ட வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி இன்று அஸ்ஸாம் மாநிலம், **Nalbari**-யில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே மற்றும் அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி ஆகியோர், கர்நாடகாவில் மாண்டியா மற்றும் கோலார் தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும், மேற்குவங்க முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி, அஸ்ஸாம் மாநிலம், **Silchar** தொகுதியில் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

தமிழகத்திலும் தேர்தல் பிரச்சாரம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின், இன்று மாலை, சென்னை பெசண்ட் நகர் பகுதியில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை, திருவள்ளூர் தொகுதியில் இன்று பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, சேலம் மக்களவைத் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை, கோயம்புத்தூரில் பல்வேறு இடங்களில் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.

பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ், தருமபுரி தொகுதியில் இன்று பிரச்சாரம் செய்து வருகிறார்.

-----------

தமிழகத்தில் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலை 6 மணியுடன் நிறைவடைகிறது.

இதனையொட்டி வெளியூர்களிலிருந்து அழைத்துவரப்பட்ட அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகள், கட்சிப் பணியாளர்கள் உள்ளிட்டோர் தொகுதியைவிட்டு வெளியேற வேண்டுமென்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரதா சாஹூ வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நட்சத்திர பேச்சாளர்கள் உட்பட வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட வாகன அனுமதி மாலை ஆறு மணிக்கு மேல் செல்லாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தொடர்பான பொதுக்கூட்டம் மற்றும் ஊர்வலத்தை யாரும் ஒருங்கிணைக்கவோ, நடத்தவோ அல்லது அவற்றில் பங்கேற்கவோ கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக வலைதளங்களில் தேர்தல் தொடர்பான பிரச்சாரம் மேற்கொள்ளக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை நெறிமுறைகளை மீறி மாலை ஆறு மணிக்கு மேல் பிரச்சாரத்தில் ஈடுபடுவோருக்கு இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

திருமண மண்டபங்கள், சமுதாயக்கூடங்கள், தங்கும் விடுதிகளில் உள்ள வெளிநபர்கள் உடனடியாக வெளியேற வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மக்களின் ஒவ்வொரு வாக்கும் ஜனநாயகத்திற்கு முக்கியம் என்பதால் 100 சதவீதம் வாக்களிக்கும் விதத்தில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் அமைதியாக நடைபெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

-----------

இதனிடையே, தமிழகத்தில் வாக்குப்பதிவு மையங்களுக்குத் தேவையான அனைத்து பொருட்களும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

மேலும் வாக்காளர்கள் எந்தவித சிரமமும் இன்றி வாக்களிக்கும் விதத்தில், பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

வாக்குப்பதிவு மையங்களை மாவட்ட தேர்தல் அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

திருச்சியில் வாக்குப்பதிவு மையங்களை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. பிரதீப் குமார், பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பிரதீப் குமார் 50 செகண்ட்ஸ்)

-----------

ஸ்ரீராமர் அவதரித்த நாளான ராமநவமி இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

அயோத்தியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஸ்ரீராம்லல்லா கோவிலில் இவ்விழாவை சிறப்பாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பக்தர்கள் கூட்டத்தை சமாளிப்பதற்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

கோவில் பகுதியில் கனரக வாகனங்கள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அயோத்தி நகர் முழுவதும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

தற்காலிக மருத்துவ முகாம்களும், போதிய குடிநீர் வசதியும் அயோத்தியில் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

ஸ்ரீராமநவமியையொட்டி குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் நாட்டு மக்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள செய்தியில், இந்த புனித நாளில் ஸ்ரீராம பகவானின் உண்மை மற்றும் நேர்மை ஆகியவற்றை பின்பற்றி நடப்போம் என்றும் அவரின் அன்பு, கருணை, வீரம் ஆகிய பண்புகள் நமக்கு உத்வேகம் ஊட்டுவதாக அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் விடுத்துள்ள செய்தியில், ஸ்ரீராம பிரானின் வழிகளை பின்பற்றி, நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்போம் என்று கூறியுள்ளார்.

ஸ்ரீராமபிரானின் வாழ்க்கையும், கொள்கைகளும், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கட்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சுயசார்பு இந்தியாவை உருவாக்க ராமபிரான் அருள் புரியட்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி தமிழகத்தில் ராமேஸ்வரம் மற்றும் திருவாரூரில் உள்ள கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

-----------

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் 268-வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள சமூகவலைதளப் பதிவில் தீரன் சின்னமலை இந்தியாவின் விடுதலைக்காக பாடுபட்ட ஒப்பற்ற தலைவர் என்றும், அவருடைய வீரமும், போர்த்திறனும் உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை கிண்டியில் உள்ள அன்னாரது திருவு உருவச் சிலைக்கு கீழே வைக்கப்பட்டிருந்த உருவப்படத்திற்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அவருடன் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் மரியாதை செலுத்தினர்.

சேலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தீரன் சின்னமலையின் திருவுருவப்படத்திற்கு அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

-----------

ஐக்கிய அரபு அமிரகத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக அங்கு பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகளில் தண்ணீர் தேங்கியுள்ளதால் போக்குவரத்து முற்றிலும் முடங்கியுள்ளது.

மக்கள் யாரும் வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பள்ளி குழந்தைகளுக்கு ஆன்லைன் வகுப்புகள் நடத்துமாறும், அரசு ஊழியர்கள் வீட்டிலிருந்தே பணியாற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அடுத்த 24 மணி நேரத்திற்கு கனமழை தொடரும் என்றும் அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஓமனில் பெய்த கனமழையால் இதுவரை 19 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பஹ்ரைன், கத்தார், சவுதி அரேபியாவிலும் கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில் அங்கு பெய்து வரும் கனமழை காரணமாக,, வளைகுடா நாடுகளிலிருந்து சென்னைக்கு வரும் 16 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

-----------

மியான்மர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அந்நாட்டின் முன்னாள் பிரதமரும், அரசியல் தலைவருமான திருமதி. **Aung San Suu Kyi** வீட்டுக் காவலுக்கு மாற்றப்படுவதாக அந்நாட்டு ராணுவ அரசு தெரிவித்துள்ளது.

கடுமையான வெப்பம் நிலவுவதாலும், சிறையில் அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதாலும், அவர் தற்போது வீட்டுச் சிறைக்கு மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

-----------

மெக்ஸிகோவில் **Acapulco**-வில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Rithvik – Nikki Kalliayanda** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 7-5, 6-2 என்ற செட்கணக்கில் அர்ஜென்டினாவின் **Juan Pablo** – பிரேஸிலின் **Lucas Reies Da Silva** இணையை வென்றது.

-----------

சீனாவின் **Makkav** நகரில் நடைபெற்று வரும் உலக டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் மனிக்கா பத்ரா இன்று சீனாவின் **Manyu Wang**–ஐ எதிர்கொள்கிறார்.

முன்னதாக நடைபெற்ற மற்றொரு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் ஶ்ரீஜா அகுலா தோல்வியடைந்தார்.

----------

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் குஜராத் இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி அகமதாபாத்தில் இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

----------

சீனாவின் **Shenzhen**-ல் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-----------